**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C)
**SPLCC.No.18/2025 - PW-31**

| | |
|---|---|
| Name | திரு.சுப்பிரமணி |
| Father Name | ஜோதி |
| Village /Area | காஞ்சிபுரம் |
| Taluk | காஞ்சிபுரம் |
| Occupation | மி.வாரியம் / ஓய்வு |
| Age | 61 |
| Religion | இந்து |
| Aadhar Card No. | 4698 6371 3343 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 06.11.2025.

**எதிரிகள் 3 முதல் 6, 8 முதல் 10, 12, 15 வரை ஆஜர். 7, 11, 13, 14 எதிரிகள் ஆஜர் இல்லை. பா.நா.சு.ச பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை –**

நான் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து, பணிஓய்வு பெற்று தற்போது காஞ்சிபுரம், இந்திரா நகர், கோனேரிகுப்பத்தில் வசிக்கிறேன். நான் கே.வேலூர் தமிழ்நாடு மின்வாரிய அலுவலகத்தில் இளநிலை பொறியாளராக 2004ம் ஆண்டு முதல் 2019ம் ஆண்டு வரை பணிபுரிந்தேன். பாப்பேரி கிராமம் கே.வேலூர் மின்வாரிய அலுவலக பிரிவின் கீழ் வருகிறது. கடந்த 18.08.2012 ஆண்டு வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையில் காவல் ஆய்வாளர் என்னை 6 விவசாயிகளின் விண்ணப்பங்கள் சம்மந்தமாக விசாரணை செய்ய அழைத்தார். நான் வேலுர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை காவல் ஆய்வாளர் அலுவலகத்திற்கு அதன்படி சென்றேன். அங்கு

ஆய்வாளர் என்னிடம் 6 விவசாயிகளின் புதிய மோட்டார் மாற்றி கொடுக்ககோரும் விண்ணப்பங்களையும், அதனுடன் இணைந்த மின்சார இணைப்பு தொடர்பான சான்றிதழ்களையும் என்னிடம் காண்பித்தார். அந்த மின்சார இணைப்பு தொடர்பான சான்றிதழ்களில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடைய கையெழுத்துக்கள் அல்ல என்றும், அந்த சான்றுகள் என் அலுவலகத்தில் இருந்து கொடுக்கப்படவில்லை என்றும், சொன்னேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பெருமாள் விண்ணப்பத்துடன் உள்ள மின்சார இணைப்பு தொடர்பான சான்றிதழில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல, அதில் உள்ள முத்திரையும் என் அலுவலகத்தில் உள்ள முத்திரை அல்ல. அதே போன்று சுந்தரராஜன், மகேந்திரன், லட்சுமண நாயுடு, கோதண்டன், ஸ்ரீராமலு ஆகிய விவசாயிகளின் விண்ணப்பத்துடன் உள்ள மின்சார இணைப்பு தொடர்பான சான்றிதழிகளில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது அல்ல, அவைகளில் உள்ள முத்திரைகளும் என் அலுவலகத்தில் உள்ள முத்திரைகள் அல்ல. இந்த விவசாயிகளுக்கு மின்சார இணைப்பு தொடர்பான சான்றிதழ்களை நான்தான் வழங்கியிருக்க வேண்டும். இது சம்மந்தமாக என்னிடம் மாதிரி கையெழுத்துக்களை கிராம நிர்வாக அலுவலர் முன்பாக வாங்கினார்கள். அந்த மாதிரி கையெழுத்துக்களின் சான்றிட்ட நகல்தான் **அ.சா.ஆ.16** ஆகும். (அ.சா.ஆ.16ன் அசல் ஆவணம் இந்நீதிமன்ற SPLCC.19/2025 வழக்கில் உள்ளது). வழக்கு சம்மந்தமாக வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை 3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பில் –**

இதுமாதிரி மின் இணைப்பு மோட்டார் மாற்ற விவசாயிகள் கேட்டபோது நானும் சான்றிதழ்கள் வழங்கியுள்ளேன் என்றால், சரிதான். அந்த சான்றிதழ் இப்படிதான் இருக்க வேண்டும் என்று எந்த வழிகாட்டு நெறிமுறைகளும் இல்லை என்றால், சரிதான். அந்த சான்றிதழ்கள் எந்தெந்த தேதிகளில் கொடுக்கபட்டிருக்கிறது என்பது எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. நான் விடுப்பில் இருந்த போதோ, வேறு பணியில் இருந்த போதோ எனக்கு பதிலாக வேறு அதிகாரி பொறுப்பாக நியமிக்கப்படுவார் என்றால், சரிதான். அவ்வாறு நியமிக்கப்படும் பொறுப்பு அதிகாரியும் சான்றிதழ் கொடுப்பார் என்றால், சரிதான். என்னிடம் காண்பிக்கப்பட்ட 6 சான்றிதழ்களை பொறுப்பு அதிகாரி கொடுத்திருக்கலாம் என்றால், அது தவறு. நான் எவ்வளவு நாட்கள் பணியில் இருந்தேன், எவ்வளவு நாட்கள் விடுப்பில் இருந்தேன் என்ற விவரங்கள் எனக்கு தற்போது நினைவில்லை. நான் விடுப்பில் இருந்த காலங்களில் எத்தனை அதிகாரிகள் பொறுப்பு வகித்தார்கள் என்று எனக்கு தெரியாது. யார் எப்படி முத்திரை போட வேண்டும் என்ற வழிகாட்டுதல் எதுவும் இல்லை என்றால், அதற்கு வரைமுறைகள் உள்ளது. அலுவலகத்தில் அனைவரும் அந்த வரைமுறையை பின்பற்றி தான் முத்திரைகள் போடுவோம். ஒரு சுதந்திர தினத்தன்று போலீசார் என்னை வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வருமாறு தகவல் சொன்னார்கள். அவ்வாறு போலீசார் சொன்ன ஆண்டு 2012 ஆகும். போலீசார் என்னை போனில் அழைத்தார்கள். பிறகு, நான் 3 நாட்கள் கழித்து 18ந் தேதி காலை 11 மணிக்கு வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு

அலுவலகத்திற்கு சென்றேன். காவல் நிலையத்தில் ஆய்வாளர் இருந்தார். நானும், அ.சா.30 ரவியும் ஒன்றாகதான் வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு சென்றோம். நானும், அ.சா..30யும் ஒன்றாக வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு செல்லவில்லை என்றாலும், அலுவலகத்திற்கே செல்லவில்லை என்றாலும், அது சரியல்ல. என் அலுவலகத்தில் வேறு பொறுப்பு அதிகாரி சான்றிதழ் கொடுத்திருக்கலாம் என்றாலும், போலீசாருக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அது சரியல்ல.

**குறுக்கு விசாரணை 12, 15 எதிரிகள் தரப்பில் –**

3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக வழக்கறிஞர் தெரிவித்தார்.

**மறு விசாரணை –**

இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM

Principal District Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Principal District and Sessions Judge,
Ranipet